**கவனிக்க.-** *05.01.2024 ஆம் திகதிய 2366 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2367 - 2024 ජනවාරි මස 12 වැනි සිකුරාදා - 2024.01.12**

*2367 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |

| | பக்கம் |
|---|---|
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 2 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 3 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2024, பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, சனவரி மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1 - B 82531- 353 (2024/01)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள சான்றிதழை செயலிழக்கச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்.

மத்திய மாகாண சபையின் மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ஹிந்தகொட முதியன்சேலாகே மாதவி சதுரிகா பிரபாஷினி ஹிந்தகொட ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட் பிரிவின் கீழ் அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் 1985.01.11 ஆம் திகதி வழங்கப்பட்ட இலக்கம் மாத்தளை பிர/4023 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளராகிய மாத்தளை, கொடுவேகெதர, இல. 90 ஏ குடியேற்றத்தில் வசிக்கும் திரு, ரத்னாயக்க முதியான்சேலாகே ஜயசுந்த பண்டா என்பவருக்குக்கு கையளிக்கப்பட்டுள்ள மாத்தளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தின் இலக்கம் ................................... இன் கீழ் --- ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளர் ஆவது சம்பந்தமாக சட்டரீதியான உரிமையாளர் இல்லாமை அல்லது உரிமையாளர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறோம். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2024.02.02 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

#### மேற்கூறிய அட்டவணை

மாத்தளை நிர்வாக மாவட்டத்தின் மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவின் கோன்சிய பற்றில்/ கொறலையில் கொடுவேகெதர கிராம அலுவலர் பிரிவின் வதுருமுள்ள, பஹலவெல எனும் கிராமத்தில் அமைந்துள்ளது. மாத்தளை பிரிவிற்குப் பொறுப்பான நில அளவையாளர் பொறுப்பான மற்றும் அளவையாளர் நாயகத்தினால் நில அளவை இலக்கம் பி. பி. ஏ. 2411 ஆம் இலக்க வெளிக்களத் தாளின் /- அவர்களின் - நிலஅளவை இலக்கம் பி. பி. ஏ. 2411 துண்டு பிரிக்கும் வரைபடத்தின் - /அவர்களின் நில அளவை இலக்கம் - உடைய இரேகை வரைதலின் இலக்க 90 உடைய நிலத்துண்டு என காட்டப்பட்டுள்ளது. விஸ்தீரணத்தில் ஹெக்டயர் -/ ஏக்கர் - ரூட் 2 பேர்ச் 6 விஸ்தீரணமுள்ளது. கீழே குறிப்பிடப்பட்டவாறு எல்லையிடப்பட்ட அரச காணி:

வடக்கு : பி. பி. ஏ. 2411 காணி துண்டு இலக்கம் 66 மற்றும் 89 (வீதி);

கிழக்கு : பி. பி. ஏ. 2411 காணி துண்டு இலக்கம் 89 (வீதி);

தெற்கு : பி. பி. ஏ. 2411 காணி துண்டு இலக்கம் 89 (வீதி);

மேற்கு : பி. பி. ஏ. 2411 காணி துண்டு இலக்கம் 66 மற்றும் 89 (வீதி), தனியார் காணி.

எச். எம். எம். சீ. பீ. ஹிந்தகொட,
பிரதேச செயலாளர்,
மாத்தளை.

2023, ஒகத்து, 14.

01 -73

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/74911.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: SPLC/ GAL/03/06/03/219.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

காலி மாவட்டம், பட்டினமும் பிரதேச செயலகத்திற்குச் நொந்தமான இலக்கம் 130, எத்தலிகொட தெற்கு கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த எத்தலிகொட கிராமத்தில் அமையப் பெற்றிருக்கும் கடற்திரள் நில வரைபட இலக்கம் 810017 இன் வயலம் 05 கடதாசி இலக்கம் 01 இன் துண்டு இலக்கம் 165 இன் மூலம் காட்டப்பட்டுள்ள 0.2750 ஹெக்டயர் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித் துண்டினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு டீ. செம்சன்ஸ் இன்டஸ்டிரீஸ் தனியார் கம்பனி மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : கடத்திரள் இலக்கம் 810017 இன் வலயம் 05 கடதாசி இலக்கம் 01 இன் துண்டு இலக்கம் 66 நுழைவுப் பாதை;
கிழக்கு : கடத்திரள் இலக்கம் 810017 இன் வலயம் 05 கடதாசி இலக்கம் 01 இன் துண்டு இலக்கங்கள் 66, 69;
தெற்கு : கடத்திரள் இலக்கம் 810017 இன் வலயம் 05 கடதாசி இலக்கம் 01 இன் துண்டு இலக்கம் 162;
மேற்கு : கடத்திரள் இலக்கம் 810017 இன் வலயம் 05 கடதாசி இலக்கம் 01 இன் துண்டு இலக்கம் 177 சாதுஜன மாவத்தை.

கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசின் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தளைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.11.15 முதல் 2023.11.14 வரை)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவானதாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது 05 வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தப்பட வேண்டும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வர்த்தக நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணப்பட வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.11.15 ஆம் தினத்திலிருந்து 05 வருடங்கள் நிறை வடைவதற்கு முன்னர் குத்தகை வழங்கிய நோக்கத்தை நிறைவு செய்யும் நோக்கத்துக்காக துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப்

பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. டீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, திசெம்பர் 18.

01 - 65

---

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி பதிவாளர் ஆணையாளர் இல: 4/10/74450.
மாகாணக் காணி ஆணையாளரின் இல.: NCP/PLC/L11/04/பலு/பி. அ.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

அநுராதபுர மாவட்டத்தில், பலுகஸ்வெவ பிரதேச செயலக பிரிவில் 589, ஹபரன கிராம அலுவலர் பிரிவில் சியம்பலாகஸ்வெவ கிராமத்தில் இ.கி.வ. இல. 847 இன் பாகமொன்றை காட்டுவதற்கு காணி அலுவலர் ஆர்.சீ. எஸ். தர்மதாஸ அவர்களினால் வரையப்பட்ட வரைபடத்தின் துண்டு இல. 01 இல் காட்டப்பட்டுள்ள 0.3036 ஹெக்டயார் (றூட் 03) அளவு கொண்ட அரச காணி பிரிவு வர்த்தக நடவடிக்கைக்காக சூரிய ஆரச்சி ரங்கா ஜீவனி அவர்களின் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இங்கு அறிவிக்கப்படுகின்றது.

2. கோரப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : ஜயந்தி பெரேராவின் அங்கீகாரமற்ற நிலம்:
கிழக்கு : ஒதுக்கப்பட்ட பிரதேச செயலக வீதி;
தெற்கு : சமிந்த ரொஷான் அலுத்கெதர என்பவரின் அங்கீகாரமற்ற காணி;
மேற்கு : அரச காணி.

03. கோரப்பட்டுள்ள காணி தேவையான விடயம் தொடர்பாக குத்தகை வழங்குவதற்கு முடியும். அவ்வாறே அரசாங்கத்தினால் வகுக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு காணியை குத்தகை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது வருடங்கள் (30) (2023.08.09 ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்களுக்கு)

(ஆ) **வருடாந்தக் குத்தகைத் தொகை**.- 2023 ஆம் ஆண்டின் காணி மதிப்பீட்டு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை விட (ரூபா 5,000,000.00) குறையும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் மீது அவ்வருடத்தின் காணியின் சந்தை விலையின் பெறுமதி 2% . 2023 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீடு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை விட (ரூபா 5,000,000.00) அதிகமாகும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடு அவ்வருடத்தின் சந்தை விலை பெறுமதியில் 4%. இக்குத்தகைத் தொகை ஒவ்வொரு ஐந்து வருடத்திற்கு ஒரு முறை திருத்தப்பட வேண்டும் என்பதோடு அது முந்தைய 05 வருடத்தின் இறுதியிலும் அறவிட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) இக்காணி வணிக நோக்கத்திற்காக அன்றி வேறு எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தக் கூடாது;

(ஈ) இக்குத்தகை ஆரம்பிக்கப்பட்டு ஒருவருட காலத்தினுள் பிரதேச செயலாளரின் விருப்பத்திற்கேற்ப அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விஷேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை உட்படல் வேண்டும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள/கட்டப்பட்ட கட்டடம் நல்லதோர் அபிவிருத்தி நிலையில் பாரமரிக்கப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்ட காலத்தினுள் குத்தகைகாரரினால் காணி கையகப்படுத்தும் விடயத்தினை உணரத்தவறினால், குத்தகையை முடிவுறுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2023.08.09 ஆம் திகதி தொடக்கம் 05 வருடங்கள் வரை குடும்பத்தினுள் மாற்றல் செய்ய அல்லது இக்காணி குத்தகைக்கு எடுக்கப்பட்ட விடயத்தினை உறுதி செய்வதற்காக இடைக்கால குத்தகை அல்லது மாற்றல் மற்றும் ஏனைய இடைக்கால குத்தகை வழங்கல் அல்லது மாற்றலுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகை கட்டணமானது தொடர்ந்தேர்ச்சையாக செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் குத்தகை தவறவிடப்படும் சந்தர்ப்பத்தில் ஒப்பந்தம் தானாகவே செல்லுபடியற்றதாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி தொடக்கம் 06 வாரங்களுக்குள் குறித்த காணி குத்தகை வழங்கப்படமாட்டாது

என்பதனை ஏற்றுக் கொள்ளும் காரணங்களை எழுதி என்னிடம் சமர்ப்பிக்காவிடின் கோரிக்கையின் படி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. டீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, திசெம்பர் 18.

01 - 66

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல: 4/10/71192.
மாகாணக் காணி ஆணையாளரின் இல.: NU/3/1/2/3923/Manu.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

நுவரெலியா மாவட்டம், நுவரெலியா பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 535 - டி மத்திய நுவரெலியா கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த நுவரெலியா கிராமத்தின் NU/NEW/2020/139 ஆம் இலக்க நிலவரைபடத்தின் துண்டு இலக்கம் B இன் மூலம் காட்டப்படும் 10 பேர்ச் அளவுடைய நிலப் பகுதியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு ஹபராத்துவ வல்கமகே குலசிறி என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. கோரப்படும் காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : துண்டு இலக்கம் A:
கிழக்கு : நு. ம. நி. 42 இன் கடதாசி இலக்கம் 14 இன் துண்டு இலக்கம் 71 இன் ஒரு பகுதி மற்றும் பாதை;
தெற்கு : புகையிரதப் பாதை (கைவிடப்பட்ட);
மேற்கு : நு. ம. நி. 42 இன் கடதாசி இலக்கம் 14 இன் துண்டு இலக்கம் 71.

03. இக்காணியானது குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்படக்கூயதாய் இருக்கின்றது. இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (கௌரவ அமைச்சர் அவர்கள் குத்தகையை அனுமதித்த 2023.10.10 ஆம் திகதியிலிருந்து)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட் குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரின் மூலம் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான)/பிரதேச செயலாளரின் மனம் திருப்திப்படுமாறு காணியானது அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்ருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மானிக்கப்பட்டிருக்கும்/நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு விடப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு வடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை அல்லது கையளிப்பு செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இடைநிறுத்தப்படும் பட்சத்தில் குத்தகை சுயமாகவே செல்லுபடியற்றதாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியானது குத்தகைக்கு அனுமதித்தலாகாது என எண்ணும் பட்சத்தில் அவற்றுக்கான தகுந்த காரணங்களை எழுத்து மூலம் எனக்கு அறிவிக்காதவிடத்து காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம் சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, திசெம்பர் 20.

01 - 67

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/74509.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: UPLC/L/26/KG/L/207.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மொனராகல மாவட்டம், கதிர்காமம் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 146, கதிர்காமம் கிராம அலுவலர் பிரிவின் காமிணிபுர கிராமத்தின் அதிகாரம் பெற்ற நில அளவையியலாளர் திரு. ரீ. பீ. அத்தநாயக்க என்பவர் மூலம் தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. M929 இனது காணித் துண்டு இல. 01 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 08 பேர்ச், 02 ரூட் அளவுடைய அரச காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு திருமதி, மல்வென்ன ஹேவகே சன்திமா லக்மினி குலதிலக என்பவர் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : எஸ். எல். தசாநாயக்க என்பவரது காணி:
கிழக்கு : கால்வாய் ஒதுக்கம் மற்றும் வீதி;
தெற்கு : ஆரியசேன என்பவரது காணி;
மேற்கு : பத்திரண என்பவரது காணி.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும், இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2023.02.10 ஆம் திகதியிலிருந்து)

(ஆ) **வருடாந்த குத்தகை**.- 2023 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணப்பட வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.02.10 ஆம் தினத்திலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி

வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுசானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, திசெம்பர் 18.

01 - 68

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் இலக்கம்: 4/10/75048.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NCP/PLC/L8/TR/3/2/20/ii.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், திரப்பனே பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 555, லபுனோருவ கிராம அலுவலர் பிரிவின் லபுனோருவ கிராமத்தின் இலக்கம் 10083 நிலவரைபடத்தின் காணித் துண்டு இலக்கம் 01 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 17 ஏக்கர் 12.3 பேர்ச் அளவுடைய அரச காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு பரமத்த பவுன்டேசன்ஸ் (கரன்ட்) என்னும் பெயரில் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : அரச காணி:
கிழக்கு : அரச காணி மற்றும் காட்டு ஒதுக்கம்;
தெற்கு : அரச காணி;
மேற்கு : அரச காணி.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும், இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.11.15 ஆம் திகதியிலிருந்து)

**வருடாந்தக் குத்தகைக் காலம்**.- 2023 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணிஅபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2023.11.15 ஆம் தினத்திலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகைக்கு அனுமதிக்கப்பட மாட்டாது;

(எ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி

வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. டீ. மதுசானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, திசெம்பர் 18.

01 - 69

---

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/66980.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: PLC/L2/25/7/58/2020.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மேல் மாகாணம் கம்பஹா மாவட்டம், வத்தளை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 171பீ பலகல கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த மாடாகொட கிராமத்தின் நில வரைபட இலக்கம் 512002 இனது காணித் துண்டு இல. 01 இன் 02 ஏக்கர் 01 றூட் 27 பேர்ச் அளவுடைய அரச காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு எஸ். ஆர். ஸ்டீல் பிறைவட் லிமிடட் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : பிரதேச சபை பாதை:
கிழக்கு : பிரதேச சபை பாதை;
தெற்கு : துண்டு இலக்கம் 4, 3 மற்றும் 2 (நுழைவுப் பாதை);
மேற்கு : கிராமம் 3768 ஆம் இலக்க ஆரம்ப நிலவரைபடத்தின் துண்டு இலக்கம் 52, 49, 48 மற்றும் பிரதேச சபை பாதை.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன்பொருட்டு அரசின் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2023.10.24 ஆம் திகதியிலிருந்து 30 வருடங்கள்)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவானதாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஒவ்வொரு 05 வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தப்பட வேண்டும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்**.- தவணைத் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத் தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனங் கவரும் வகையில் காணிஅபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாணக் காணி ஆணையாளர் (மேல் மாகாணம்)/ பிரதேச செயலாளர்/செயற்றிட்டத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.10.24 ஆம் தினத்திலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகைகளோ அல்லது கைமாற்றங்களோ செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ச்சியாகச் செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்;

(ஒ) குத்தகைப் பணத்தினைத் தொடர்ச்சியாகச் செலுத்தாத விடத்து செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையின் பொருட்டு 10% தண்டப் பணமும் அறிவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

கே. ஜீ. பீ. சௌமியா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, திசெம்பர் 18.

01 - 70

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/65233.
மாகாணங்களுக்கிடையிலான மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: Mo/DLC/2/21.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மொணராகல மாவட்டம், புத்தள பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 145A, உளுகல கிராம அலுவலர் பிரிவின் ஒக்கம்பிட்டிய கிராமத்தின் நிலவரைபட இல. Mo/BTT/95/303 இனது காணித் துண்டு இல. Aஇன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 0.223 ஹெக்டயர் அளவுடைய அரச காணியினை சங்க நடவடிக்கைகளின் பொருட்டு வரையறுக்கப்பட்ட புத்தள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : எப். வி. பி. 54H இனது காணித் துண்டு இல. 698:
கிழக்கு : எப். வி. பி. 54H இனது காணித் துண்டு இல. 421;
தெற்கு : ஒக்கம்பிட்டியவிலிருந்து மாலிகாவில வரைக்குமான பிரதான வீதி;
மேற்கு : எப். வி. பி. 54H இனது காணித் துண்டு இல. 698.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அமைதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.01.27 ஆம் திகதியிலிருந்து 2053..01.26 ஆம் திகதி வரை)

(ஆ) **வருடாந்தக் குத்தகை-** 2023 ஆம் ஆண்டில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 2% ஆகும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை சங்க நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணிஅபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.01.27 ஆம் தினத்திலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கினை நிறைவேற்றுவதன் பொருட்டான துணைக் குத்தகைகள் அல்லது கைமாற்றங்கள் தவிர்ந்த, வேறு துணைக் குத்தகைகளோ அல்லது கைமாற்றங்களோ செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்;

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப்

பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுசானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 18.

01 - 71

---

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/73288.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: PLC/L1/09/07/02.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

கொழும்பு மாவட்டம், மஹரகம பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 497பீ ருக்மலே கிழக்கு கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த ருக்மலே கிராமத்தின் நில வரைபட இலக்கம் 9474 இன் காணித் துண்டு இல. 02 இன் மூலம் காட்டப்பட்டுள்ள 0.0253 அளவுடைய அரச காணியினை சங்க நடவடிக்கைகளின் பொருட்டு விஜயபுர கிராம அபிவிருத்தி சங்கம் என்னும் பெயரில் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : கொ 751 நிலவரைபடத்தின் துண்டு இலக்கம் 02 மற்றும் 01:
கிழக்கு : கொ 751 நிலவரைபடத்தின் துண்டு இலக்கம் 01;
தெற்கு : கொ 751 நிலவரைபடத்தின் துண்டு இலக்கம் 01;
மேற்கு : கொ 751 நிலவரைபடத்தின் துண்டு இலக்கம் 02 மற்றும் 01.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன்பொருட்டு அரசின் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- ஐந்து (05) வருடங்கள் (2023.10.10 ஆம் திகதியிலிருந்து 2028.10.09 வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் வருடத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் காணியின் சந்தைப் பெறுமதியின் 1/2% ஆகும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை விஜயபுர கிராம அபிவிருத்தி சங்க நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிகைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங் கவரும் வகையில் காணிஅபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகைக்காரர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) குத்தகைப் பணத்தினைத் தொடர்ச்சியாகச் செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும். குத்தகைப் பணத்தினைத் தொடர்ச்சியாகச் செலுத்தாதவிடத்து செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையின் பொருட்டு 10% தண்டப் பணமும் அறிவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, திசெம்பர் 15.

01 - 72

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/74596.
மாகாணக் காணி ஆணையாளரின் நாயகத்தின் இலக்கம்.: SPLC/GAL/5/3/6.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

காலி மாவட்டம், நியாகம பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 33பீ, பொருளுஹேன கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த பொருளுஹேன கிராமத்தின் நியாகம/4/4/1/26-120 ஆம் இலக்க நில வரைபடத்தின் துண்டு இலக்கம் C மூலம் காட்டப்பட்டுள்ளவாறான 0.0418 ஹெக்டயர் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித் துண்டினை சங்க நடவடிக்கைகளின் பொருட்டு வரையறுக்கப்படாத ஹத்தக, உஹன்ஓவிட்ட சிக்கனம் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் தொடர்பான கூட்டுறவுச் சங்கம் நீண்ட கால குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : 222B பாதை மற்றும் பாதை ஒதுக்கம்:
கிழக்கு : 222C;
தெற்கு : 222D, 222C;
மேற்கு : 222C.

கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசின் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (கௌரவ அமைச்சர் அவர்கள் குத்தகையை அனுமதித்த 2023.11.15 ஆந் திகதி முதல்)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 ஆம் வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை வரையறுக்கப்படாத ஹத்தக, உஹன்ஓவிட்ட சிக்கனம் மற்றும் கடன் கொடுக்கல வாங்கல் தொடர்பான கூட்டுறவுச் சங்கத்தின் நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகைக்காரர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) குத்தகை ஆரம்பமாகும் 2023.11.15 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதன் பொருட்டான துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் தவிர ஏனைய துணைக் குத்தகைகளோ அல்லது கைமாற்றங்களோ செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. டீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2023, திசெம்பர் 18.

01 - 137

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.